# சான்றாளரின் சாட்சிய வாக்குமூலம்
# (DEPOSITION OF WITNESS)

மேற்கோள்:– 1. குற்றவியல் நடைமுறை விதிகளின் 42–ஆம் விதி, 53–ஆம் நீதிமன்ற படிவம்
(Rule 42 and Judicial from No. 53 of Criminal Rules of Practice)
2. குற்றவியல் நடைமுறை தொகுப்பு சட்டத்தின் XXIII–ஆம் அத்தியாயம்
(Chapter XXIII Code of Criminal Procedure)

## மூன்றாம் கூடுதல் மாவட்ட அமர்வு நீதிபதி, சேலம்
(IN THE COURT
OF THE III–ADDITIONAL DISTRICT SESSIONS JUDGE, SALEM).

| | | |
|---|---|---|
| **வழக்கு எண்** | :– | S.C.No. 187/2019 |
| **வாக்குமூலம் அளிக்கும் சான்றாளரின் வரிசை எண்** | :– | அ.சா– 02 ( PW– 02 ) |
| **பெயர்** | :– | குமார் |
| **கணவரின்/தகப்பனாரின் பெயர்** | :– | |
| **ஊர்** | :– | |
| **வருவாய் வட்டம்** | :– | |
| **சமூகம் (சாதி)** | :– | |
| **தொழில்** | :– | |
| **மதம்/சமயம்** | :– | |
| **வயது** | :– | |

**2025–ஆம் ஆண்டு நவம்பர் திங்கள் 04 ஆம் நாள் 1969–ஆம் ஆண்டில் ஆணையுறுதிச் சட்டத்தின் (நடுவன் சட்டம் 44/1969) வகையங்களுக்கு இணங்க சத்தியப்பிரமாணம் செய்து வைக்கப்படடது.**

**சான்றாளரின் கையொப்பம்**

01–ஆம், 03–ஆம், 04–ஆம், 07–ஆம், 08–ஆம் எதிரிகள் தோன்றினார்கள். 05–ஆம் எதிரி தோன்றவில்லை. மனு அனுமதிக்கப்பட்டது. எதிரிகளின் வழக்குரைஞர் தோன்றினார்.

**முதல் விசாரணை:-**

நான் புதுக்கோட்டை மாவட்டம், ஆவுடையார் கோவில் வட்டம், கருப்பூரில் வசிக்கிறேன். உணவகத்தில் சமைப்பவராக வேலை செய்கிறேன். 2017-ஆம் ஆண்டு மேட்டூரில் இந்துஸ்தான் தாபா உணவகத்தை குத்தகைக்கு எடுத்து நடத்தினேன். அந்த உணவகம் காவேரி Cross என்ற இடத்தில் உள்ளது. அந்த கடையில் நானும் லட்சுமி என்பவரும் வேலை செய்தோம். வேறு யாரும் அங்கு வேலை செய்யவில்லை.

19.12.2017-ஆம் தேதியன்று மதியம் எங்கள் கடையில் கூட்டம் அதிகம் இருந்தது. அந்த கடையில் மொத்தம் 06 அல்லது 07 குடில் இருக்கும். எல்லா குடில்களிலும் வாடிக்கையாளர்கள் நிறைந்திருந்தனர். நான் வாடிக்கையாளரிடம் என்ன உணவு வேண்டும் என்று கேட்டுக்கொண்டு வந்தேன். சமையல் அறையில் நான் உணவு தயாரித்துக்கொண்டிருந்தேன். சுமார் 01 மணிக்குபிறகு தாபாவிற்கு உள்ளே சமையல் கூடத்திற்கு வெளியே சத்தம் கேட்டது. நான் ஓடிவந்து வெளியே பார்த்தேன். 03 அல்லது 04 ஆட்கள் முகமூடி அணிந்த நிலையில் என்னை கடந்து ஓடினார்கள். சமையல் கூட வாயில்முன் ஒருவர் வெட்டுப்பட்டு இரத்தம் வழிந்த நிலையில் கிடந்தார். அதை நான் பார்த்ததும் அதிர்ச்சி அடைந்தேன். நான் அந்த இடத்திலேலே உட்கார்ந்துவிட்டேன்.

சிறிது நேரத்திற்குள் காவல் துறையினர் அங்கு வந்தனர். என்னை விசாரித்தனர். நான் தற்போது சொன்னதை சொன்னேன்.

நீதிமன்றத்தில் தோன்றியுள்ள எதிரிகளை எனக்குத் தெரியாது. அவர்களை நான் அந்த இடத்தில் பார்க்கவில்லை. வந்தவர்கள் முகமூடி அணிந்திருந்தனர். சம்பவத்திற்குபிறகு வெட்டுப்பட்டவர் யார் என்று நான் விசாரித்து தெரிந்து -கொள்ளவில்லை. வெட்டியவர்கள் யார் என்றும் நான் விசாரித்து தெரிந்துகொள்ளவில்லை.

என்னை சிறைச்சாலைக்கு அழைத்துச் சென்று அடையாளம் காட்ட சொன்னார்கள். நான் யாரையும் அடையாளம் காட்டவில்லை. நான் நீதித்துறை நடுவரிடம் இரகசிய வாக்குமூலம் அளித்தேன். என்னிடம் காட்டப்படும் வாக்குமுலத்தில் என்னுடைய கையொப்பம் உள்ளது. அது. **அ.சா.ஆ-03** ஆக குறியீடு செய்யப்படுகிறது.

**அரசு தரப்பு வேண்டுகோளுக்கு இணங்க பிறழ் சான்றாளராக பாவிக்கப்பட்டார். விடைபொதி வினாக்கள் கேட்க அனுமதி வழங்கப்பட்டது.**

என் கடையில் கணேஷ் என்பவர் சமையல்ராக இருந்தார் என்றால் சரிதான். அவர் அன்று வேலைக்கு வரவில்லை. நான் கடையில் இருந்தபோது முதலில் மூவர்தான் வந்தனர் என்றால் இல்லை. கூட்டமாக இருந்தனர். அங்கு கத்தியுடன் வந்த நபர்களில் பாரதிராஜா என்று சொல்லி இவனை போடுங்கடா என்று சொன்னதாகவும் வெட்டுப்பட்ட நபரின் பெயர் அமிர்தராஜ் என்று நீங்கள் கேள்வி பட்டதாகவும் அமிர்தாஜ்வுடன் வந்த முரளிதரன் என்பவரையும் அருவாளால் வெட்டியதாகவும் வெட்டுப்பட்ட முரளிதரன் ஓடி ஒளிந்து கொண்டதாகவும் வெட்டுவதற்கு வந்த நபர்களில் ஒருவருக்கு கையில் காயம் ஏற்பட்டதாகவும் அவர் என் கடையில் இருந்த கிழந்த லுங்கியை எடுத்து கட்டிக்கொண்டு ஓடியதாகவும் நான் புலனாய்வின்போது கூறிவிட்டு தற்போது எதிகளுக்கு பயந்து பொய் சாட்சி சொல்கிறேன் என்றால் சரியல்ல.

**குறுக்கு விசாரணை**

சம்பவம் நடந்தவுடன் 10 நிமிடங்களில் காவல் துறையினர் அங்கு வந்துவிட்டனர் என்றால் சரிதான். அன்று என்னை விசாரித்தார்கள். அதன்பிறகு என்னை விசாரிக்கவில்லை. காவல் துறையினர் சொல்லிக்கொடுத்து நீதித்துறை

நடுவரிடம் வாக்குமூலம் அளித்தேன் என்றால் சரிதான்.

Sd/-V. Pugazhenthi,
Additional District&Session Judge,
Salem.